தமிழ் இணைய கல்வி கழகத்தின்

கணித்தமிழ் மாநாட்டில் 'ஹேக்கத்தான்' போட்டி

● மாணவர்கள், மொழி தொழில்நுட்பம் சார்ந்தவர்கள் பங்கேற்கலாம்

சென்னை

தமிழ் இணைய கல்விக் கழகத்தின் சார்பில் கணித்தமிழ் பன்னாட்டு மாநாட்டின் ஒருபகுதியாக நிரலாக்க (ஹேக்கத்தான்) போட்டியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கல்விக்கழக இயக்குநர் சே.ரா.காந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த 'தமிழிணையம் 99' மாநாட்டுக்குப் பின் 25 ஆண்டுகள் கழித்து தமிழக அரசு ஒருங்கிணைக்கும் 'பன்னாட்டு கணித்தமிழ் 24' மாநாடு, அடுத்தாண்டு பிப்ரவரி 8, 9, 10-ம் தேதிகளில் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கு இணையவழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகிய முக்கியமான பணிகளைச் செய்துவரும் தமிழ் இணைய கல்விக்கழகம் இந்த மாபெரும் மாநாட்டை ஒருங்கிணைக்கிறது.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய கல்விக்கழகம், ஸ்டார்ட்அப் டிஎன் நிறுவனத்துடன் இணைந்து நிரலாக்கப் போட்டியை (ஹேக்கத்தான்) நடத்துகிறது. இப்போட்டியின் வாயிலாக நவீனத் தொழில்நுட்பங்களான இயற்கை மொழி ஆய்வு, இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, இதர டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழியின் வளமையை வெளிக்கொணரவும், புதுமைகளைச் சிந்திக்கத் தூண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் எழுத்துணரி (தமிழ் ஓசிஆர்), தமிழ் பேச்சைப் புரிந்து கொள்ளுதல், தமிழ் உள்ளடக்க உருவாக்கம், தமிழ் உரையாடி, தமிழில் இயற்கை மொழி ஆய்வு உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நிரலாக்கப் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும், ஆர்வலர்களும், மொழி தொழில்நுட்பம் சார்ந்து செயல்படும் நிறுவனங்களும் கலந்துகொள்ளலாம்.

மேலும், நிரலாக்கப் போட்டியிலிருந்து உருவாகியிருக்கும் கருவிகள், மென்பொருள்கள், தளங்கள், தொழில்நுட்பங்கள் போன்றவை ஆய்வாளர்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டுக்காக www.tamilvu.org இணையதளத்தில் பதிவேற்றப்படும். நிரலாக்கப் போட்டி குறித்த விரிவான விவரங்கள் https://www.kanitamil.in/#/hackathon என்ற இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை புறநகரில் நேற்று மழை விட்டுவிட்டு பெய்தது. இதனால், பல பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தாம்பரத்தில் வாகனங்கள், கிடைத்த இடத்தில் நுழைந்து, ஒட்டுமொத்த சாலையையும் ஆக்கிரமித்து, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தன. நகர்வதற்கு வழியின்றி பேருந்துகள் ஆங்காங்கே நிற்க, அதில் இருந்து இறங்கிய பயணிகளும், ஏறுவதற்காக காத்திருந்த பயணிகளும் அவதியடைந்தனர். படம்: எம்.முத்துகணேஷ்

திருவந்தவார் நடுநிலைப் பள்ளியில்

குடிநீர் தொட்டி இடித்து அகற்றம்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சாலவாக்கத்தை அடுத்த திருவந்தவார் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில், மாணவர்களின் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டியில் இருந்து பிடிக்கப்பட்ட குடிநீர், கடும் துர்நாற்றம் வீசியபடி இருந்ததாக சர்ச்சை எழுந்தது.

இதுதொடர்பாக, தகவல் அறிந்த ஆட்சியரும், எஸ்பியும் பள்ளிக்கு நேரில் வந்து குடிநீர் தொட்டியை ஆய்வு செய்தனர். மேலும், பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் சத்துணவு பணியாளர்களிடம் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறும்போது, "குடிநீர் தொட்டி திறந்த நிலையில் இருந்ததால் காகம் போன்ற பறவைகள் மூலம் அழுகிய முட்டை வீசப்பட்டிருக்கலாம். இதனால், குடிநீரில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. குடிநீர் தொட்டியில் வேறு எதுவும் கலக்கப்படவில்லை. மேலும் இது, பயன்பாட்டில் இல்லாத கைவிடப்பட்ட குடிநீர் தொட்டி. அதனால், இக்குடிநீர் தொட்டி இடித்து அகற்றப்படும்'' என்றார். இந்நிலையில், ஆட்சியரின் உத்தரவின் பேரில் நேற்று காலை ஜேசிபி இயந்திரம் மூலம் குடிநீர் தொட்டி இடித்து அகற்றப்பட்டது.

சென்னை குடிநீர் ஏரிகளின் நீர் இருப்பு அதிகரிப்பு

திருவள்ளூர்

சென்னை மற்றும் அதன்புற நகர் பகுதிகள் அடங்கிய திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தற்போது விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சென்னையின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முக்கிய ஏரிகளின் நீர் இருப்பு அதிகரித்து வருகிறது.

இதில், நேற்று காலை நிலவரப்படி, புழல் ஏரிக்கு விநாடிக்கு 189 கன அடி மழைநீர் வந்து கொண்டிருப்பதால், 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு, 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு, 2,726 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 18.58 அடியாகவும் இருக்கிறது. சென்னை குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 159 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பூண்டி ஏரிக்கு விநாடிக்கு 70 கன அடி மழை நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால், 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு, 35 அடி உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு, 1,862 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 30.52 அடியாகவும் உள்ளது. சென்னை குடிநீர் தேவைக்காக பேபி கால்வாய்கள் மூலம் விநாடிக்கு 13 கன அடியும், உபரி நீர் விநாடிக்கு 30 கன அடியும் வெளியேற்றப்படுகிறது.

1,081 மில்லியன் கன அடி கொள்ளளவு, 18.86 அடி உயரம் கொண்ட சோழவரம் ஏரிக்கு விநாடிக்கு 66 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. எனவே, சோழவரம் ஏரியின் நீர் இருப்பு 676 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 15.01 அடியாகவும் இருக்கிறது.

500 மில்லியன் கன அடி கொள்ளளவு, 36.61 அடி உயரம் உள்ள கண்ணன் கோட்டை- தேர்வாய் கண்டிகை ஏரிக்கு விநாடிக்கு 10 கன அடி மழைநீர் வருவதால், அந்த ஏரியின் நீர் இருப்பு 435 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 34.64 அடியாகவும் உள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரிக்கு விநாடிக்கு 142 கன அடி மழைநீர் வந்து கொண்டிக்கிறது. ஆகவே, 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு, 24 அடி உயரம் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு 3,113 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 21.97 அடியாகவும் உள்ளது. சென்னை குடிநீர் மற்றும் சிப்காட் தேவைக்காக விநாடிக்கு 109 கன அடியும், உபரி நீர் விநாடிக்கு 25 கன அடியும் வெளியேற்றப்படுகிறது என நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விரைவு ரயிலில் பிரேக் பிணைப்பு பகுதி பழுது

ஆவடி

கேரள மாநிலம்- திருவனந்தபுரத்திலிருந்து நேற்று முன் தினம் சென்னைக்கு விரைவு ரயில் புறப்பட்டது. அந்த ரயில், நேற்று காலை 8.02 மணிக்கு சென்னை-அரக்கோணம் ரயில்வே மார்க்கத்தில், திருநின்றவூர் அருகே நெமிலிச்சேரி ரயில் நிலையம், பட்டாபிராம் ரயில் நிலையத்துக்கு இடையே வந்து கொண்டிருந்தது.

அப்போது, அந்த ரயிலின் குளிர் சாதன பெட்டி ஒன்றின் பிரேக் பிணைப்பு பகுதியில் திடீரென பழுது ஏற்பட்டது. இதனால், சம்பந்தப்பட்ட பெட்டி பகுதியிலிருந்து புகை வெளியேறியது. இதையடுத்து, உடனே விரைவு ரயில் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து, சம்பவ இடம் விரைந்த ரயில்வே தொழில்நுட்ப ஊழியர்கள், பழுதை சரி செய்தனர். இதையடுத்து, காலை 8.22 மணிக்கு விரைவு ரயில், சென்னை நோக்கி புறப்பட்டது.

WANTED

For a Reputed Steel Making (Rolling Mill) Company at Chennai & Hosapeta needs Qualified & Experience candidates on following discipline.

1. CNC Operators (Notching / Branding /Turning)
2. Utility Operator
3. Utility Mechanical Fitter Technician
4. Utility Electrical Technician
5. Mill Fitter (Slit Rolling & Continues Mill)
6. Guide Fitter
7. Mechanical Fitter (Cooling bed / Roller table conveyor etc)
8. B.E Graduate / Diploma (Mechanical / Electrical) (Fresher's)

Interested candidates may call on this contact numbers

+91-99528 75552 , 98435 97674, 63844 17755, 94435 14579, 97897 88800

Apply to :

btiipl.hr@gmail.com

OTHER PERKS & FACILITIES

EPF, ESIC, BONUS & GRATUITY AS PER GOVT NORMS

FREE BACHELORS ACCOMEDATION.

FREE LOCAL TRANSPORTATION.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பாக

தூய்மை இந்தியா திட்ட இயக்குநர் ஆய்வு

சென்னை

சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் மத்திய அரசின் நகர்ப்புற வீட்டு வசதி விவகாரத் துறை அமைச்சக இணைச் செயலாளர் மற்றும் தூய்மை இந்தியா திட்டம் (2.0) இயக்குநர் ரூபா மிஸ்ரா தலைமையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகராட்சியில் செயல்பாட்டில் உள்ள ஈரம் மற்றும் உலர்கழிவுகளை கையாளும் முறைகளின் பல்வேறு திட்டங்கள், இனிவரும் காலங்களில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள், திடக்கழிவு மேலாண்மை குறித்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகள், நீண்ட நாட்களாக தேங்கிக் கிடக்கும் குப்பைகள் மற்றும் கட்டிடக் கழிவுகளை அகற்ற மேற்கொள்ளப்படும் தீவிரத் தூய்மைப் பணித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள் குறித்து விரிவாக விவாதித்து ஆலோசிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை இந்தியா திட்ட இயக்குநர் ரூபா மிஸ்ரா, சேத்துப்பட்டில் அமைந்துள்ள 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஈரக்கழிவுகளை மறுசுழற்சி செய்து உயிரி எரிவாயு தயாரிக்கும் ஆலையை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அர்பேசர் சுமீத் நிறுவனத்தாரின் வாகன கட்டுப்பாட்டு மையத்தையும், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் குப்பைகளை பிரித்தெடுக்கும் முறையையும், அங்கு செயல்பட்டு வரும் தோட்டக்கழிவுகள் மற்றும் இளநீர் குடுவைகள் மறுசுழற்சி மையத்தையும் நேரில் பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) ஷரண்யா, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ஆர்.அழகு மீனா, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

GOVERNMENT OF TAMILNADU
நீர்வளத்துறை
மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர்-632 006.

மொத்த தொகை ஒப்பந்த முறை-விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / இரு உறை ஒப்பந்த வழி முறை

மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 07 மே.பா.வ.வ / வேலூர்/கோ- டெண்டர் /2023-2024 / நாள்.21.11.2023.

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., (கூ/பொ)., மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர்-6 அவர்களால் மறு இ-டெண்டர் மூலமாக **வ.எண். 1 முதல் 4 வரை "இரு உறை ஒப்பந்த வழி முறை"** மற்றும் வ.எண். 4 மற்றும் 5 **"ஒரு உறை ஒப்பந்த வழி முறை"** இணையதளத்தில் தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரவேற்கப்படுகிறது.

வ எண்	வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) ரூபாய் இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை (ரூபாயில்)	பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட)	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்
1	வேலூர் மாவட்டம், K.V.குப்பம் வட்டம், மேலூர் கிராமம் முதல் கவசம்பட்டு கொட்டாற்றை புனரமைக்கும் பணி.	940.43	4,81,000/-	18 மாதங்கள்	08.12.2023 அன்று 11.00 மு.ப.
2	வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் கிராமம் முதல் பாலாறு இணையும் வரையுள்ள பாண்டியன் மடுவு கால்வாயை புனரமைப்பு மற்றும் மறு சீரமைப்பு பணிகள்	593.86	3,07,000/-	12 மாதங்கள்	08.12.2023 அன்று 12.00 பி.ப.
3	திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் சின்ன வேப்பம்பட்டு கிராமம் அருகே கானாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி.	383.25	2,02,000/-	12 மாதங்கள்	08.12.2023 அன்று 14.00 பி.ப.
4	திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வெள்ளகுட்டை கிராமத்தில் இருந்து எராகுட்டை ஏரி வரை செல்லும் போராகானாற்றை புனரமைக்கும் பணி.	239.73	1,30,000/-	12 மாதங்கள்	08.12.2023 அன்று 15.00 பி.ப.
5	திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் கிராமம், வாலேரி ஏரி உபரிநீர் கால்வாயில் இருந்து கொரட்டி ஏரிக்கு RCC குழாய் பதித்தல் பணி.	141.11	81,000/-	12 மாதங்கள்	08.12.2023 அன்று 16.00 பி.ப.
6	வேலூர் மாவட்டம், K.V.குப்பம் வட்டம், காங்குப்பம் கிராமம் மோர்தானா நீர்த்தேக்கத்தின் இடது புற கால்வாயில் L.S.20150 மீ முதல் L.S.20450 மீ வரை ஏற்படும் நீர் கசிவை தடுக்கும் பொருட்டு செயற்கை புவியியல் தாள் முறையுடன் பக்க சுவர் அமைக்கும் பணி.	142.42	82,000/-	12 மாதங்கள்	08.12.2023 அன்று 17.00 பி.ப.

ஒப்பந்தப்புள்ளிகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை 07.12.2023 அன்று 3.30 பிற்பகல் வரை பதிவிறக்கம் செய்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல் ஆகியவை இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., (கூ/பொ)., மேல்பாலாறு வடிநில வட்டம், வேலூர் - 6

செ.ம.தொ.இ / 6184 / ஒப்பந்தப்புள்ளி / 2023

அரசியல், சமூக அமைப்புகள் செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

1433-ஆம் பசலி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 1433ம் பசலி வருடத்தில் (உத்தரவுத் தேதி முதல் **30.06.2024** முடியவுள்ள காலத்திற்கு) கொள்முதல் செய்யப்படவுள்ள பொருட்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பு.

(1) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இணையதள முகவரி **https://www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இணையதளம் மூலம் ஒப்பந்தத்தில் பங்குகொள்ள ஒப்பந்ததாரர்கள் (Digital Signature Certificate) வைத்திருக்க வேண்டும்.
(2) ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **07.12.2023 முற்பகல் 11.00 மணி,**
(3) ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **07.12.2023 முற்பகல் 12.00 மணி**
(4) ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம் : **திருக்கோயில் தலைமை அலுவலகம்.**

ஒப்பந்தப்புள்ளி இனம் : பஞ்சாமிர்த தயாரிப்பு பிரிவிற்கு தேவையான 200 கிராம் கொள்ளளவுள்ள பெட்ஜார் சீல் (WAD) உள்ள மூடியுடன் (Food Grade) கொள்முதல் செய்தல். (ISO தரச்சான்று நிறுவனம்).

ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை : **ரூ.25.00 இலட்சம்**
சால்வன்சி மதிப்பு : **ரூ.25.00 இலட்சம்**

ஒப்பந்ததாரர் டெண்டர் டெபாசிட் தொகையினை **https://tntenders.gov.in** இணையதளத்தில் செலுத்த வேண்டும். **01.07.2023**க்கு பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற டெண்டர்தாரர் பெயருக்கான சால்வன்சி சான்றிதழ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு Bank Guarantee சான்றிதழ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் செ.ம.தொ.இ/ 6142 /ஒப்பந்தப்புள்ளி/2023 **இணை ஆணையர் / செயல் அலுவலர்**

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, RAKSHIT Rajmohan Awadhiya S/o Rajmohan Awadhiya R/o Flat No. 15091, 8th Floor, Tower 15A, Prestige Bella Vista, Iyyappathangal, Chennai have changed my name from Rakshit Rajmohan Awadhiya to Rakshit Awadhiya for all purpose by affidavit sworn before Notary S. DHANASEKARAN dated 18-11-2023

I G. Vidhya Jain W/O, S J Arun Vinod R/o W/o, Arun Vinod, No 6/14a 1st Floor, Chakrapani House R,r, Colony, 4th Cross Street, Jafferkhanpet, Ashok Nagar, Chennai, Tamil Nadu - 600083 have changed my name to B V Anjana Vidhyaa.

பொது

சுற்றுலா

IRCTC
விமான சுற்றுலா
(சென்னையிலிருந்து)
டார்ஜிலிங் கேங்டாக்
01.12.2023 (6 நாட்கள்) Rs.51,400/-
ராஜஸ்தான் ஜெய்பூர்-உதய்பூர்-ஜோத்பூர்-ஜெய்சல்மார்
13.01.2024 (7 நாட்கள்) Rs.42,500/-
அந்தமான்
23.01.2024 (6 நாட்கள்) Rs.52,800/-
விமான பயணம், உணவு, ஹோட்டலில் தங்கும் வசதி, போக்குவரத்து, GST உட்பட
8287931974 / 9003140682

பொது அறிவிப்பு

PUBLIC NOTICE

NOTICE is hereby given that the Certificate for 62980 Equity shares of face value of Rs. 1/- each bearing Folio No. CUL111518, Certificate No. 2479 and Dist. Nos. from 4368345 to 4431324 of CARBORUNDUM UNIVERSAL LIMITED Standing in the name of late Mrs. K Jayanthi Baliga has been lost or mislaid and the undersigned has applied to the Company to issue duplicate Certificate(s) for the said shares. Any person who has a claim in respect of the said shares should lodge such claim with the Company at its Registered Office. Carborundum Universal Limited, Parry House, 43 Moore Street, Chennai, Tamil Nadu, 600001 within 15 days from this date else the company will proceed to issue duplicate Certificate(s).

Name of Shareholder/Applicant: Mr. Kalyanpur Radhakrishna Baliga Date: 23-11-2023

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் 2024 மாநாட்டுக்கான முன்னோட்ட கருத்தரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் ரூ.4,102.27 கோடி முதலீட்டுக்கான 320 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலர் அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், ஸ்ரீபெரும்புதூர் சட்டப்பேரவை உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாநகராட்சி துணை மேயர் குமரகுருநாதன், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி உள்ளிட்டோர்.

குரோம்பேட்டை உணவகத்தில் அதிகாரிகள் சோதனை

குரோம்பேட்டை

குரோம்பேட்டையில் உள்ள ஒரு சைவ உணவகத்தில் நேற்று முன்தினம், வாடிக்கையாளர் ஒருவர் மதிய உணவு அருந்திய போது அந்த உணவில், சிறிய கத்தி துண்டு இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். இது குறித்து ஊழியர்கள் அலட்சியமாக பதில்கூறிய வீடியோ சமூக வலைதளத்தில் பரவியது.

இதையடுத்து, மாவட்ட நியமன அலுவலர் அனுராதா உத்தரவின்பேரில் உணவு பாதுகாப்பு அலுவலர் செந்தில் ஆறுமுகம் மற்றும் அதிகாரிகள் நேற்று உணவகத்தில் சோதனை நடத்தினர். குறைகளை வரும் 7 நாட்களுக்குள் சரிசெய்து சுத்தமான முறையில் வைத்திருக்க வேண்டும் என்று எச்சரித்தனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ/இ/வ.செ.அ.மி.நி–I	32	1
2	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி–2	144, 146	2
3	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி–I	173, 174	2

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/6204/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
கோயம்புத்தூர் மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
ஆலாந்துறை பேரூராட்சி
NABARD - 2023-2024
ந.க.எண்.6-6/2023 நாள்.21.11.2023

1. முழுமையான விவரங்களுக்கு https://tenders.tn.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. கோயம்புத்தூர் மாவட்டம், ஆலாந்துறை பேரூராட்சி செயல் அலுவலரால் சாலைப்பணி செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tenders.tn.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 24.11.2023 முதல் 12.12.2023 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 12.12.2023 மாலை 3.00 மணி
ஆ)மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.12.2023 மாலை 3.30 மணி

(ஒம்) செயல் அலுவலர்,
செ.ம.தொ.இ.6287/ஒப்பந்தப்புள்ளி/2023 ஆலாந்துறை பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்

படிவம் A
பொது அறிவிப்பு

(நொடிப்பு மற்றும் திவால் போர்டு ஆஃப் இந்தியாவின் ஒழுங்குமுறைகள் 6ன் கீழ்
(பெருநிறுவன நபர்களின் நொடிப்பு தீர்மான செயல்முறைகள்) ஒழுங்குமுறைகள் 2016)

கார்கோவிங்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டின் கடனாளர்கள் கவனத்திற்கு

பொருத்தமான தகவல்கள்

1.	பெருநிறுவன கடன்தாரரின் பெயர்	**கார்கோவிங்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்**
2.	கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	**22.06.2012**
3.	பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது/ பதிவு செய்யப்பட்டுள்ளது	கம்பெனிகள் பதிவாளர்-சென்னை
4.	பெருநிறுவன கடன்தாரரின் பெருநிறுவன அடையாள எண்./ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்./	U60231TN2012PLC086461
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருப்பின்)	பதிவு அலுவலகம் : **புதிய எண்.37, (எண்.18) லோகேஷ் டவர்ஸ்-முதல் தளம், கோடம்பாக்கம் ஹை ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600 034.**
6.	**நொடிப்பு ஆரம்ப தேதி**	**21.11.2023**
7.	நொடிப்பு தீர்மான செயல்முறையின் கணக்கிடப்பட்ட மூடுதல் தேதி	**19.05.2024** அதாவது நொடிப்பு ஆரம்ப தேதியிலிருந்து 180 நாட்கள்
8.	இடைக்கால தீர்மான வல்லுநராக செயல்படும் நொடிப்பு வல்லுநரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**டாக்டர். S.R. ஸ்ரீராம் சேகர் IBBI/IPA-003/IP-N000144/2017-2018/11598**
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்டபடி இடைக்கால தீர்மான வல்லுநரின் முகவர் மற்றும் மின்னஞ்சல்	ஃபிளாட் எண்.11, பிரயாக் அப்பார்ட்மெண்ட்ஸ், 1வது தளம், 8/15, காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை - 600 020. மின்னஞ்சல் : shekhershriraam@gmail.com
10.	இடைக்கால தீர்மான வல்லுநருடன் கடித தொடர்புக்கு பயன்படுத்தப்பட வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	**டாக்டர். S.R. ஸ்ரீராம் சேகர் ஃபிளாட் எண்.11, பிரயாக் அப்பார்ட்மெண்ட்ஸ், 1வது தளம், 8/15, காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை - 600 020. மின்னஞ்சல் : cargowings.cirp@gmail.com**
11.	**உரிமை கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி**	**05.12.2023**
12.	இடைக்கால தீர்மான வல்லுநரால் மதிப்பீடு செய்யப்பட்ட கடனாளர்களின் வகுப்புகள், ஏதேனும் இருப்பின், பிரிவு 21-ன் கூறு b)-ன் துணைபிரிவு (6A)-ன் கீழ்	இன்றைய தேதி வரை IRP உடன் உள்ள தகவலின்படி பொருந்தாது
13.	வகுப்பில், கடன் வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்பட அடையாளம் காணப்பட்ட நொடிப்பு வல்லுநர்களின் பெயர் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று பெயர்கள்)	பொருந்தாது
14.	(அ) பொருத்தமான படிவங்கள் மற்றும் (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடைக்க பெறும் விவரங்கள் - நெடுவரிசை 13ன் பார்வையில் பொருந்தாது	இணையதள இணைப்பு : https://ibbi.gov.in/home/downloads

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் சென்னை அமர்வு-II, **21.11.2023** அன்று **M/s. கார்கோவிங்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டின்** பெருநிறுவன நொடிப்பு தீர்மான செயல்முறை நடவடிக்கைகளை துவங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M/s. கார்கோவிங்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டின் கடனாளர்களின் உரிமை கோரிக்கைகளை அதற்கான அத்தாட்சியுடன் பதிவு எண்.10-ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் இருக்கும் இடைக்கால தீர்மான வல்லுநர் முகவரியில் **05.12.2023** அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

நிதி கடனாளர்கள், மின் அஞ்சல் மூலமே தங்கள் உரிமை கோரிக்கைக்கான அத்தாட்சியை சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடனாளர்களும் தங்களது உரிமை கோரிக்கைக்கான அத்தாட்சியை நேரடியாகவோ, தபால் மூலமோ அல்லது மின் அஞ்சல் முறையிலோ சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமைகோரிக்கையை அவர்களின் குறிப்பிட்ட படிவங்களில் சமர்ப்பிக்கப்படலாம் : படிவம் B - செயல்பாட்டு கடன் வழங்குநர் (தொழிலாளர்கள் & பணியாளர்கள் தவிர), படிவம் C - நிதி வழங்குநர், படிவம் CA-A வகுப்பில் நிதி வழங்குநர், படிவம் D - தொழிலாளர்கள்/பணியாளர், படிவம் E - தொழிலாளர்கள்/பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி & படிவம் F - பிற கடன் வழங்குநர்கள்.

பொய்யான அல்லது தவறான வழியில் உரிமை கோரல் ஆதாரங்களை சமர்ப்பித்தல் அபராதத்துக்கு உள்ளாகும்.

23 நவம்பர் 2023
சென்னை - 600 020

டாக்டர். S.R. ஸ்ரீராம் சேகர்
IBBI/IPA-003/IP-N000144/2017-2018/11598
கார்கோவிங்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டின்
இடைக்கால தீர்மான வல்லுநர்

படிவம் A
பொது அறிவிப்பு

(திவால் நிலை மற்றும் திவால்நிலை ஒழுங்குமுறை (பெருநிறுவனதாரர்களின் திவால் தீர்வு செயல்முறைகள்) விதிமுறைகள் 2016-ன் ஒழுங்குமுறைகள் 6-ன்கீழ்)

பிங்க் சிட்டி எக்ஸ்பிரஸ்வே பிரைவேட் லிமிடெட்-ன் கடன் அளித்தவர்கள் கவனத்திற்கு

தொடர்புடைய விபரங்கள்

1.	**பெருநிறுவன கடன்தாரர் பெயர்**	**பிங்க் சிட்டி எக்ஸ்பிரஸ்வே பிரைவேட் லிமிடெட்**
2.	கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	02.04.2008
3.	பெருநிறுவன கடன்தாரரை இணைத்த/ பதிவு செய்த அதிகாரப்பூர்வ அதிகாரி	ROC - சென்னை
4.	பெருநிறுவன அடையாள எண்./ பெருநிறுவன கடன்தாரரின் குறுகிய பொறுப்பு அடையாள எண்.	U45203TN2008PTC067179
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருந்தால்)	**பதிவு அலுவலகம்:** பிளாட் எண்.201, ஜெயம் பிளாக், 2வது தளம் சித்ரா அவென்யூ, சூளைமேடு, சென்னை - 600094, தமிழ்நாடு. **பிரின்ஸ்பல் அலுவலகம்:** 4வது தளம், ரஹேஜா ஸ்கூயர், IMT மனேசர், கூர்கான், ஹரியானா-122001.
6.	பெருநிறுவன கடன்தாரரின் திவால் ஆரம்ப தேதி	மாண்புமிகு NCLT மும்பை பெஞ்ச் 17.11.2023 அன்று (வெள்ளிக்கிழமை) உத்தரவை அறிவித்தது. இருப்பினும், IRP ஆனது 21.11.2023 அன்று (செவ்வாய்கிழமை) சென்னை பதிவாளர் NCLT-மிருந்து ஆர்டரை பெற்றது.
7.	திவால் தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி	**15.05.2024**
8.	கலைப்பாளராக செயல்படும் இடைக்கால திவால் தீர்வு வல்லுநரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**விக்ரம் பஜாஜ் பதிவு எண்.:** IBBI/IPA-002/IP-N00003/2016-2017/10003 **AFA Valid upto :** 18.10.2024
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இடைக்கால திவால் தீர்வு வல்லுநர் முகவரி மற்றும் மின்னஞ்சல்	**முகவரி:** 214, டவர் ஏ, ஸ்பாஸ்டேஜ், செக்டர் 47, கூர்கான்-122018. **மின்னஞ்சல் :** bajaj.vikram@gmail.com
10.	இடைக்கால திவால் தீர்வு வல்லுநரின் தொடர்புக்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	**முகவரி:** 214, டவர் ஏ, ஸ்பாஸ்டேஜ், செக்டர் 47, கூர்கான்-122018. **மின்னஞ்சல் :** ip.pinkcity@gmail.com
11.	உரிமைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	**01.12.2023**
12.	இடைக்கால திவால் தீர்வு வல்லுநரால், கடன் வழங்குநர்களின் வகுப்பு, பிரிவு 21-ன் துணை-பிரிவு (6A)-ன் உட்பிரிவு (b)-ன்கீழ், ஏதேனும் இருப்பின்	இல்லை
13.	வகுப்பின் கடன் வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்டபிரதிநியாக செயல்பட அடையாளம் காணப்பட்ட திவால் தீர்வு வல்லுநர் பெயர்கள் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று பெயர்கள்)	இல்லை
14.	(a) தொடர்புடைய படிவம் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிகளின் விபரங்கள் :	(a) Web.Link: https://ibbi.gov.in/home/downloads (b) இல்லை

தேசிய கம்பெனி சட்டம் தீர்ப்பாயம், உத்தரவின்படி **பிங்க் சிட்டி எக்ஸ்பிரஸ்வே பிரைவேட் லிமிடெட்**-ன் நிறுவன திவால் தீர்வு செயல்முறைகள் **17.11.2023** அன்று ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு அளிக்கப்படுகிறது.

பிங்க் சிட்டி எக்ஸ்பிரஸ்வே பிரைவேட் லிமிடெட்-ன் பகடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரல்களுக்கான ஆதாரங்களை **01.12.2023** அன்று அல்லது அதற்கு முன்பாக வ.எண்.10-ல் குறிப்பிட்டுள்ள கலைப்பாளரின் முகவரியில் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னனு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

வ.எண்.12-க்கு எதிராக பட்டியலிடப்பட்டுள்ள ஒரு வகுப்பைச் சேர்ந்த நிதிக் கடன் வழங்குபவர், வகுப்பின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்பட (வகுப்பை குறிப்பிடவும்) வரிசை எண்.13-க்கு எதிராக பட்டியலிடப்பட்டுள்ள மூன்று திவால்நிலை வல்லுநர்களிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதைப் படிவம் CA-ல் குறிப்பிடவேண்டும்.

கிளைம்கள் பெற தவறான அல்லது தவறான ஆதாரங்களை சமர்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

நாள் : 23.11.2023
இடம் : கூர்கான்

விக்ரம் பஜாஜ்
கன்டெய்னர் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்-க்கான இடைக்கால தீர்மான வல்லுநர்
பதிவு எண்.: IBBI/IPA-002/IP-N00003/2016-2017/10003

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).